விபரம் கேட்டால் அமைச்சர்களால் எப்படிப் பதில் சொல்ல முடியும் ? ஆகவே, இதற்கு அமைச்சரவர்கள் பதில் சொல்ல வேண்டுமென்ற அவசியம் இல்லை,

Manufacture of measuring tapes.

* 347. *Q.* THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the Government have issued any warning on the manufacture of measuring tapes by private bodies in October 1972 ; and

(*b*) if so, the details thereof ?

<u>மாண்புமிகு திரு. என். வி. நடராசன்</u> : (அ) & (இ) : அங்குல அளவை நாடா அல்லது அங்குலம், மெட்ரிக் அளவுகள் கொண்ட அளவை நாடாக்கள் ஆகியவற்றைத் தயாரித்தல், விற்பனை செய்தல், வாங்குதல், பயன்படுத்துதல் ஆகியவை 1956-ஆம் ஆண்டு தர எடை—அளவைகள் சட்டம், தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு எடை—அளவைகள் செயற்படுத்துதல் சட்டம் ஆகியவற்றை மீறியதாகும் எனவும், இத்தவறு களைச் செய்பவர்கள் தங்கள் மீது வழக்கு தொடரப்படுத்துவதற்குட்பட்ட வராவார்கள் எனவும் ஒரு அறிக்கையை 1972 அக்டோபரில் அரசு வெளியிட்டது.

Students of Fisheries Technology.

* 348 *Q.* THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether it is a fact that the students of the Fisheries Technology of the Central Polytechnic, Adyar, have gone on hunger strike in November 1972 ; and

(*b*) if so, the details thereof ?

<u>மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து</u> : (அ) ஆம்.

(இ) மீனளத் தொழில் நுட்பவியல்—கப்பற்கலையியல் வகுப்பு மாணவர்கள் (1-வது, 2-வது ஆண்டு மாணவர்கள்), தங்களது கோரிக் கைகளை வலியுறுத்தி 20–11–1972-லிருந்து உண்ணாவிரதம் இருந்தனர். மீனளத்துறைத் துணை இயக்குநர், தொழில் நுட்பக் கல்வி இணை இயக்குநர், மத்திய பல் தொழில் பயிற்சிப் பள்ளி முதல்வர் ஆகியோர் மாணவர்களின் கோரிக்கைகள் மீது அவசியமான விளக்கங்கள் கொடுத்த பின்னர், மாணவர்கள் 21–11–1972 அன்று உண்ணா விரதத்தைக் கைவிட்டனர்.

1973 மார்ச் 13]

திரு. சோ. அழகர்சாமி : அவர்கள் என்னென்ன கோரிக்கைகளை வைத்து உண்ணாவிரதம் இருந்தார்கள் ? அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில் அரசாங்கம் என்னென்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அவர்கள் 4 கோரிக்கைகளை முன் வைத்து உண்ணாவிரதம் இருந்தார்கள். அவர்களது முதல் கோரிக்கை, மீனளத் தொழில் நுட்பவியல் கப்பற் கலையியல் பட்டயதாரர்கள் தொழில் நுட்பப் பணியாளர்களாகக் கருதப்பட வேண்டும் ; அவர்களுக்கு தொடக்கச் சம்பளமாக ரூ. 325 வழங்கப்படவேண்டும் என்பது. இரண்டாவது கோரிக்கை—மீனளத் துறையிலுள்ள துணை ஆய்வாளர் பதவிகள், மீனளத் தொழில் நுட்பவியல்—கப்பற் கலையியல் வகுப்பில் பட்டயம் பெற்றவர்களுக்கு மட்டுமே ஒதுக்கப்பட வேண்டும்.

மூன்றாவது கோரிக்கை—நேர்முக விளக்கப்பயிற்சி அளிப்பதற்காக பல் தொழில் பயிற்சிப் பள்ளி வளைவுக்குள் தனியாக நீச்சல் குளம் ஒன்றிற்கு வகை செய்யப்பட வேண்டும்.

நான்காவது கோரிக்கை—நேர்முகப் பயிற்சி வகுப்புகளுக்காக மீன்பிடி படகு ஒன்று வாங்கப்பட வேண்டும்.

இந்த நான்கு கோரிக்கைகளுக்காக அவர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். நீச்சல் குளம் ஒன்றைப் பல்தொழில் பயிற்சிப் பள்ளி வளைவுக்குள் தனியாக அமைக்கவும், மீன்பிடி படகு ஒன்றை வாங்குவதற்கும் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் ஒப்புக்கொண்டிருக்கிறார். நீச்சல் குளம் அமைக்கப்படும் வரையில் மாணவர்கள் மெரினா நீச்சல் குளத்திற்குச் செல்லவேண்டிய அவசியம் ஏற்படும்போதெல்லாம் பல்தொழில் பயிற்சிப்பள்ளி பேருந்தைத் தருவதாக மத்திய பல்தொழில் பயிற்சிப் பள்ளி முதல்வர் ஒப்புக்கொண்டிருக்கிறார். மீனளத்துறையில் துணை ஆய்வாளர்களது பதவிகளுக்கு விலங்கியல் பட்டதாரிகளை நியமிப்பதற்குப் பதிலாக, மீனளத் தொழில் நுட்பவியல் — கப்பற்கலையியல் வகுப்பில் பட்டயம் பெற்றவர்களை நேரடியாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று வரையறுத்தல், மீனளத் துறைத் துணை ஆய்வாளர்களது பதவிக்கான சம்பள விகித்தை மாற்றியமைத்தல் என்ற கோரிக்கைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

Fishermen reported missing.

* 349 *Q.* THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether some fishermen who went in catamarans and mechanised boats from Royapuram area during the first week of October 1972 are missing ;

(*b*) the steps taken to rescue them ; and

(c) the results of the rescue operations ?